FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

UNDER SECTION 173 BNSS (Under Section 154 Cr.P.C.) C 8129340

1. District : Madurai PS: V & AC Year: 2025 FIR No.: 16/2025 Date: 17-09-2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முதஅ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7(a) of Pc Act 1988
(ii) Act சட்டம்: Prevention of Corruption (amendment) Act 2018 Sections பிரிவுகள்: as amended by PC (Amendment) Act 2018
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 1) 28-08-2025 at 10.15 hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 2) 8-09-2025 at 10.30 hrs.
Time Period : Time from : Time to : 3) 17-09-2025 at 9.30 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 17-09-2025 Time : 18.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 17-09-2025 Time : 18.45 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: West, 7 km
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : O/O The Assistant Engineer, TNPDCL
முறைக் காவல் எண் முகவரி Villangudi, Madurai

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. Samuel Manohar (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர் Gnanadurai

(c) Date / Year of Birth : 16-5-1969 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Textile Agent (g) Address : D.No. 2/395, PRC colony
தொழில் முகவரி Kovil Pappakudi Main Road, Sikkandar Chavadi, Madurai-18.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Ganesan, Foreman, O/o The Assistant Engineer TNPDCL, Villangudi, Madurai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Attached Pages 3 to 7

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G. Lourd. Mary 17.09.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

L. Blessy 17-9-25
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 17-09-2025 20.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை ..... No. எண் .....
Inspector. VGAC
Madurai.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 17.09.2025-ஆம் தேதி மாலை 18.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை சிக்கந்தர்சாவடி கோவில்பாப்பாக்குடி மெயின்ரோடு P.R.C. காலனி கதவு எண். 2/395-ல் வசிக்கும் ஞானதுரை மகன் சாமுவேல் மனோகர் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புனர் : G. சாமுவேல் மனோகர், த/பெ. ஞானதுரை, கதவு எண்.2/395, P.R.C. காலனி, கோவில்பாப்பாக்குடி மெயின் ரோடு, சிக்கந்தர்சாவடி, மதுரை - 18. பெறுநர் : காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் கோவில்பாப்பாக்குடியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 25 வருடங்களாக ஜவுளி வியாபாரம் (Textile Agent) செய்து வருகிறேன். எனது மனைவி ஸ்வீட்டி ஜெனட் மதுரையில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறார். எனது மகன் சிபு இமானுவேல் பெங்களூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். எனது மனைவியின் தாயார் திருமதி.கிரேஸ் கஸ்தூரி அவர்களது பெயரில் கோவில்பாப்பாக்குடி கிராம ரீசர்வே எண் 48/3-ல் பிளாட் எண்.23 வடபுறத்தில் உள்ள 2171 ¼ சதுரடியில் வீடும், சிறிது இடமும் இருந்தது. அதனை அவர் எனது மனைவிக்கு தானசெட்டில் மெண்டாக கடந்த 29.03.2023-ம் தேதியன்று மதுரை பொதும்பு சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2319/2023 பிரகாரம் பதிந்து கொடுத்தார். பின்னர் நாங்கள் அந்த இடத்தில் இருந்த பழைய வீட்டினை இடித்துவிட்டு அதில் புதிய வீடுகட்ட முடிவு செய்தோம். அதன்காரணமாக கடந்த 2023-ம் ஆண்டில் அதில் ஏற்கனவே இருந்த இரண்டு மின் இணைப்புகளில் ஒன்றை மின்சார வாரியம் வசம் திரும்ப ஒப்படைத்தும், மற்றொன்றை முறையாக அதற்காக கட்டணம் செலுத்தி தற்காலிக புதிய மின் இணைப்பு எண். S.C.No.0517202496-ஆக எனது மனைவி பெயரில் பெற்றேன். பின்பு அந்த பழைய வீட்டை இடித்துவிட்டு கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் புதிய வீட்டிற்கான லிண்டல் வரை கட்டி முடித்தோம். அதன்பின்னர் வங்கி கடன் கிடைக்கபெறாததால் வீட்டுவேலையை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தோம். அந்த சமயத்தில் எங்களது வீட்டை கட்டி தரும் கட்டிட பொறியாளர் அவர்கள், நாங்கள் கட்டும் வீட்டிற்கு முன்பு செல்லும் E.B. லைன் எங்களது சொந்த இடத்தில் மூன்று அடி உள்ளே வருவதாகவும், அதனால் திட்டமிட்டபடி கட்டட வேலை மேற்கொள்ள சிரமமாக உள்ளது என கூறி, அதனை மாற்றி அமைக்க E.B. அலுவலகத்தில் மனு கொடுக்க சொன்னார். அதன்பேரில் நான் கடந்த 13.08.2024-ம் தேதியன்று அந்த E.B. லைனை மாற்றி அமைக்க வேண்டி ஆன்லைனில் எனது மனைவி பெயரில் 2000517208242238-ன் பிரகாரம் விண்ணப்பம் செய்தேன். அதில் எனது மனைவியின் செல்போன் எண். 83442 25535-யை குறிப்பிட்டிருந்தேன். பிறகு அன்றே நான் விளாங்குடி E.B. அலுவலகம்

சென்று அங்கிருந்த உதவி மின் பொறியாளர் திரு. பிரகாஷ் அவர்களை சந்தித்து அவரிடம் விபரம் கூறினேன். அவர் அவ்வலுவலகத்தில் உள்ள வணிகஆய்வாளர் திரு.சுபாஷ் அவர்களை பார்க்க சொன்னார். அதன்படி நான் அங்கிருந்த சுபாஷ் அவர்களை பார்த்து விபரம் கூறினேன். அதற்கு அவர், நானும் உதவி மின் பொறியாளர் திரு. பிரகாஷ் அவர்களும் உங்கள் இடத்தை பார்வையிட வேண்டும் அதற்காக நாளை அங்கு வருகிறோம் என கூறி அனுப்பிவைத்தார். அதன்படி மறுநாள் (14.08.2024) உதவி மின் பொறியாளர் திரு.பிரகாஷ் மற்றும் வணிகஆய்வாளர் திரு.சுபாஷ் அவர்களும் எனது இடத்திற்கு வந்து அதனை பார்வையிட்டு அளவீடு செய்தார்கள். பின்னர், திரு. சுபாஷ் அவர்கள் என்னிடம் E.B.லைனை மாற்றி அமைப்பதற்கு Estimate தயார் செய்தவுடன், நான் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருக்கும் செல்போன் எண்ணிற்கு E.B.லைனை மாற்றி அமைப்பதற்கு கட்ட வேண்டிய கட்டணத்தொகை எவ்வளவு என்று மெசேஜ் வரும், அது வந்தவுடன் அந்த தொகையை ஆன்லைனில் செலுத்தம்படி சொன்னார். பின்னர் கடந்த 2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தல்லாகுளம் ஆக்ஸிஸ் வங்கியில் வீட்டுகடன் கிடைத்தவுடன் புதியவீட்டை மீண்டும் கட்ட ஆரம்பித்தோம். பின்னர் கடந்த 16.10.2024-ம் தேதியன்று எனது மனைவியின் செல்போன் எண்ணிற்கு, E.B.லைனை மாற்றி அமைப்பதற்காக ரூ.17,358/-ஐ கட்டணமாக கட்ட சொல்லி மெசேஜ் வந்தது. அதன்பேரில் நான் அன்றைய தினமே அத்தொகையை ஆன்லைனில் செலுத்தினேன். பின்னர் மறுநாள் (17.10.2024) நான் விளாங்குடி உதவிமின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த உதவிமின் பொறியாளர் திரு.பிரகாஷ் மற்றும் வணிகஆய்வாளர் திரு.சுபாஷ் அவர்களையும் சந்தித்து ஆன்லைனில் கட்டணம் செலுத்திய விவரத்தை தெரிவித்தேன். அவர்கள் என்னிடம், இரண்டு மாதத்தில் சீனியாரிட்டி அடிப்படையில் E.B.லைனை மாற்றி அமைத்து தருவதாக கூறினார்கள். அதன்பின்பு, பலமுறை அவ்வலுவலகத்திற்கு சென்று இது சம்பந்தமாக அவர்களை சந்தித்தும், அவர்கள் அதனை செய்து தராமல் சாக்கு போக்கு சொல்லி காலம் தாழ்த்தி வந்தார்கள். அதனால் வீடுகட்டுவது தடைபட்டு வந்தது. இந்நிலையில், கடந்த 28.08.2025-ம் தேதியன்று காலை சுமார் 10.00 மணிக்கு நான் விளாங்குடி உதவிமின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று வணிகஆய்வாளர் திரு.சுபாஷ் அவர்களை சந்தித்து எனது இடத்தில் E.B.லைனை மாற்றி அமைத்து தருவது குறித்து கேட்டேன், அதற்கு அவர் என்னை எங்களது பகுதிக்குரிய போர்மேன் திரு.கணேசன் அவர்களை சந்தித்து கேட்குமாறு கூறி அவரது செல்போன் எண். 81100 37401-ஐ என்னிடம் கொடுத்தார். உடனே நான் எனது செல்போன் எண். 88070 23836 என்ற எண்ணிலிருந்து கணேசன் செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு பேசி அவரிடம் விபரம் தெரிவித்தேன். அப்போது அவர் என்னிடத்தில் தான் அலுவலகத்திற்கு வந்து கொண்டிருப்பதாக கூறி, என்னை அலுவலகத்தில் காத்திருக்கும்படி கூறினார். அதன்படி, சற்று நேரத்தில் அவ்வலுவலகத்திற்கு வந்தார். அவர் என்னிடம் எனது

இடத்தை பற்றி விசாரித்துவிட்டு, உங்களது இடத்திற்கு E.B.லைனை மாற்றி அமைத்து தருவதற்கு ரூ.5,000/-யை தரவேண்டும் என கேட்டார். அதற்கு நான் அவரிடம், ஏற்கனவே ரூ.17,358/-யை E.B.லைனை மாற்றுவதற்கு ஆன்லைனில் அதற்காக செலுத்தி விட்டேன், நீங்கள் கேட்கும் ரூ.5,000/- அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணம்தானா என கேட்டேன். அதற்கு அவர் நான் அந்த வேலையை செய்வதற்கு எனது செலவிற்காக நீங்கள் ரூ.5,000/- தரவேண்டும் என்று கூறினார். நான் எனது மனைவியிடம் பேசிவிட்டு சொல்கிறேன் என்று கூறிவிட்டு எனது வீட்டிற்கு எனது மனைவியிடம் நடந்த விபரத்தை கூறினேன். எங்கள் இருவருக்கும் லஞ்சம் கொடுப்பதற்கு விருப்பம் இல்லாததால், திரு. கணேசன் அவர்களே தானாக வந்து முடித்து கொடுக்கட்டும் என இருந்துவிட்டோம். பிறகு கணேசன் அவர்கள் அதனை சரிசெய்து தராத காரணத்தினாலும், காலதாமதம் ஆனதாலும், நான் மீண்டும் கடந்த 08.09.2025-ம் தேதியன்று காலை சுமார் 10.30 மணிக்கு நான் விளாங்குடி உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த போர்மேன் திரு.கணேசன் அவர்களை சந்தித்து எங்களது இடத்தில் செல்லும் E.B.லைனை மாற்றி தருவது சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர், அதற்காக நான் கேட்ட பணம் ரூ.5,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என என்னிடம் கேட்டார். நான் பணம் கொண்டு வரவில்லை என கூறினேன். அதற்கு அவர், உங்களது வேலையை நான்தான் முடித்து தரவேண்டும், நான் கேட்ட பணத்தை ஏற்கனவே கொடுத்திருந்தால் இந்நேரம் அந்த வேலை முடிந்து இருக்கும், சிக்கீரம் நான் கேட்ட பணத்தை கொண்டு வந்து என்னிடம் கொடுங்கள், இல்லாவிட்டால் நீங்கள் அலைந்து கொண்டேதான் இருக்க வேண்டும் என கண்டிப்பாக கூறி அனுப்பிவிட்டார். பிறகு, நடந்த விபரத்தை எனது மனைவியிடம் தெரிவித்தேன். பின்னர், எனது ஜவுளிதொழில் சம்பந்தமாகநான் வெளியூர் சென்றுவிட்டேன். இன்று (17.09.2025) காலை சுமார் 09.30 மணிக்கு விளாங்குடி உதவிமின் பொறியாளர் அலுவலகத்திற்கு மீண்டும் சென்று போர்மேன் திரு.கணேசன் அவர்களை சந்தித்து எங்களது இடத்தில் செல்லும் E.B.லைனை பணம் வாங்கி கொள்ளாமல் சிக்கீரம் மாற்றி தரும்படி கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் எனக்கு பணம் ரூ.5,000/- கொடுத்தால்தான், உங்கள் வீட்டில் அருகில் புதிதாக மின்கம்பம் அமைத்து முறையாக செய்து தருவேன், எனவே நீங்கள் நான் கேட்ட பணத்தை நாளை காலையில் இதே நேரத்தில் கொண்டு வந்து என்னிடம் கொடுங்கள் நான் உடனே, அதனை செய்து தருகிறேன் என கோபமாக கூறிவிட்டார். நானும் சரியென கூறிவிட்டு எனது வீட்டிற்கு வந்து எனது மனைவியிடம் நடந்த விபரங்களை தெரிவித்தேன். இத்தனை நாள் அலைக்கழித்து அரசு கடமையை செய்ய எங்களிடம் லஞ்சம் கேட்கும் போர்மேன் கணேசன் அவர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்கு விருப்பம் இல்லை. எனது மனைவி ஸ்வீட்டி ஜெனட் அவர்கள் என்னிடம் விளாங்குடி உதவி மின் பொறியாளர் அலுவலக போர்மென் திரு.கணேசன் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். எங்களது இடத்தில்

E.B.லைனை மாற்றி அமைப்பதற்காக அரசு கட்டணம் செலுத்திய பின்பும், அந்த வேலையை செய்து தர ரூ.5,000/- இலஞ்சமாக கேட்கும் விளாங்குடி உதவி மின் பொறியாளர் அலுவலக போர்மென் கணேசன் அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். இந்த புகார் மனுவுடன் (1) எனது மனைவி எஸ்வீட்டி ஜெனட் அவர்களுக்கு அவரது தாயார் திருமதி.கிரேஸ் கஸ்தூரி அவர்கள் எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் பொதும்பு சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2319/2023-ன் நகல், (2) ஆன்லைன் மனு எண். 2000517208242238-ன் தற்போதைய நிலவரம் குறித்த பிரிண்ட் அவுட் நகல், (3) மனு எண். 2000517208242238-ன் பிரகாரம் E.B.லைனை மாற்றி அமைக்க அரசு செலுத்த வேண்டிய Estimate Sanction ஆகி அதற்கான கட்டணம் ரூ.17,358/-யை 15 நாட்களுக்குள் கட்டவேண்டும் என்று எனது மனைவியின் செல்போனிற்கு வந்த குறுஞ்செய்தி விபரத்தின் நகல், (4) அதேபோல், கடந்த 16.10.2024-ம் தேதி அப்பணத்தை கட்டியவுடன், அதற்காக எனது மனைவியின் செல்போனிற்கு வந்த குறுஞ்செய்தி விபரத்தின் நகல் மற்றும் (5) எனது மனைவி பெயரில் உள்ள மின் இணைப்பு எண். S.C.No.0517202496-ல் 15.09.2025-ம் தேதியன்று மின்கட்டணம் செலுத்திய E-Receipt ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும், விளாங்குடி உதவி மின் பொறியாளர் அலுவலக போர்மேன் கணேசன் அவர்கள் கேட்ட இலஞ்சப்பணம் ரூ.5,000/-த்தையும் கொண்டு வந்துள்ளேன், நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கின்றேன். இப்படிக்கு, (ஒ-ம்) XXXXXX G. Samuel Manohar 17.09.25

Sir, Received the typed complaint today 17-09-2025 at 18.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the Accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, V&AC, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 16/2025 u/s 7 (a) of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 at 18.45 hrs and took up investigation. Sd./-XXXXXX (N. Bharathipriya) 17-09-25 Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr. G. Samuel Manohar, S/o. Gnanadurai, Door No.2/395, P.R.C. Colony, Kovilpappakudi Main Road, Sikkandar Chavadi, Madurai – 18 along with the copy of (1) Pothumbu Sub Registrar Office Settlement Deed Doc. No.2319/2023, (2) Online Application Number 2000517208242238 Status Details printout, (3) Application Ref. No. 200051720

8242238 Service Connection estimate sanctioned amount Rs.17,358/- intimation SMS Screenshot, (4) Payment received for Rs.17,358/- on 16.10.2024 for SC. No : 2000517208242238 SMS Screenshot and (5) TNPDCL E-Receipt for Electricity Bill payment Dated : 15.09.2025 for S.C.No.0517202496 are submitted to the Principal District and Sessions Judge, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

(N. Bharathipriya)
Inspector of Police,
Vigilance & Anti Corruption,
Madurai.
(17.09.2025)